பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 09 2024 **SUNDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க நீதித்துறைக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. கைவண்டி இழுப்போர் மற்றும் சுமைதூக்கும் பணியாளர்களை சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கொண்டு வர மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. அனைவரையும் வங்கிக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கான இலக்கை எட்டுவதற்கு அஞ்சலக பணப்பரிவர்த்தனை வங்கிகள் உதவி வருவதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

4. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குஜராத் மாநிலத்தை மத்தியக்குழு விரைவில் பார்வையிடவுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

5. அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்ஸின் **Albino Oliwati** இணை பங்கேற்கிறது.

>>>>><<<<

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு, நீதித்துறை மட்டுமல்லாது, சம்பந்தப்பட்ட அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்று வரும் தேசிய நீதித்துறை மாநாட்டில் உரையாற்றிய அவர், அதிக அளவிலான வழக்குகள் நீதிமன்றங்களில் தேங்கியிருப்பது, பெரும் சவாலாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் பேசிய மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால், உச்சநீதிமன்றம் தனது 75 ஆண்டு கால சேவையை சிறப்பாக முடித்திருப்பது நாட்டிற்கு பெருமை அளிப்பதாக தெரிவித்தார்.

அனைத்து தரப்பு மக்களுக்கும் நீதியை வழங்கும் வகையிலான சிறப்பான கட்டமைப்பு இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டை ஒருங்கிணைத்து கட்டமைக்கும் வகையில் சிறப்பான சேவையை இந்திய நீதித்துறை வழங்கி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் உரையாற்றிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. டி.ஒய். சந்திரசூட், நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள குழு, இதனை செயல்படுத்துவதற்கான திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளதாக தெரிவித்தார்.

நீதிமன்றங்களில் வழக்குகள் மேலும் தேங்குவதை தடுக்கும் வகையில், அதற்கான நிர்வாக கட்டமைப்பை கொண்டு வருவதற்கான செயல்திட்டத்தையும் இந்த குழு பரிந்துரை செய்யும் என்றும் அவர் கூறினார்.

நீதிமன்றங்களுக்கு வெளியே சமரச தீர்வு காண்பதற்கான கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

உச்சநீதிமன்றம் அண்மையில் நடத்திய தேசிய அளவிலான மக்கள் நீதிமன்றத்தில் சுமார் ஆயிரம் வழக்குகளுக்கு ஐந்து நாட்களில் தீர்வு காணப்பட்டதாகவும் தலைமை நீதிபதி திரு. டி.ஒய். சந்திரசூட் தெரிவித்தார்.

>>>>><<<<

கைவண்டி இழுப்போர் மற்றும் நடைமேடை பணியாளர்களை சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சியை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தமது துறையின் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், இப்பணியாளர்களை ஈஸ்ரம் இணையதளம் வாயிலாக பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ், அவர்களுக்கு உதவிகள் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

சுமைவண்டி இழுக்கும் மற்றும் சுமைதூக்கும் பணியாளர்கள் அனைவரையும் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கொண்டு வர அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய தொழிலாளர் நலத்துறை மேற்கொள்ளும் என்று திரு. மன்சுக் மாண்டவியா உறுதியளித்தார்.

சுமை வண்டி இழுப்போர், தொழிற்சாலைகளில் குறுகிய காலப் பணிகளுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டு வருவதாகவும், அவர்களுக்கான நிரந்தரப் பணி கிடைப்பதில்லை என்றும் இந்த ஆய்வுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

>>>>><<<<

இந்திய அஞ்சலக பணப்பரிவர்த்தனை வங்கியின் 7வது ஆண்டு நிறைவு நாள் விழா இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, மத்திய தகவல் தொடர்புதுறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில்,

மக்களுக்கு பணப்பரிவர்த்தனை சேவைகளை இந்தப் பரிவர்த்தனை வங்கி சிறப்பாக வழங்கி வருவதாக தெரிவித்தார்.

அனைத்து மக்களையும் வங்கிக் கட்டமைப்பில் இணைக்க வேண்டும் என்ற மத்திய அரசின் இலக்கை எட்டுவதற்கு அஞ்சல பணப்பரிவர்த்தனை வங்கிகள் உறுதுணையாக இருந்து வருவதாக அவர் கூறினார்.

கடந்த 7 ஆண்டுகளில் 9 கோடியே 88 லட்சம் பேர் அஞ்சலகங்களில் உள்ள இந்த பணப்பரிவர்த்தனை வங்கியில் கணக்குகளை தொடங்கியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அரசின் பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் 45 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பயனாளிகளுக்கான நிதியுதவி இந்த வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஊரகப் பகுதிகளில் அஞ்சலக பரிவர்த்தனை வங்கிகள் சிறப்பான சேவையை அளித்து வருவதாகவும் திரு. ஜோதிராதித்ய சிந்தியா குறிப்பிட்டார்.

>>>>><<<<

கிராமப்புறங்களில் உள்ள கைவினைஞர்கள் மற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த உள்ளூர் தயாரிப்பு பொருட்களை மக்கள்

வாங்கிப் பயன்படுத்த வேண்டும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அருகே புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரம நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கதர் பவனை அவர் திறந்து வைத்தார்.

அப்போது பேசிய அவர், நூற்றாண்டு விழா காணும் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் பணியாற்றும் அனைவருக்கும் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

சுற்றியுள்ள ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை வழங்கும் நிறுவனமாக காந்தி ஆசிரமம் செயல்பட்டு வருவதாக டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டார்.

>>>>><<<<

கடுமையான மழை வெள்ளத்தால் குஜராத் மாநிலத்தில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை, அமைச்சகங்களுக்கு இடையிலான மத்தியக்குழு விரைவில் பார்வையிடவுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தலைமையில் இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 25ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை பெய்த கனமழையால் ராஜஸ்தான் மற்றும் குஜராத் மாநிலங்கள் அதிக அளவில் பாதிப்புக்கு உள்ளாகின.

மத்தியப்பிரதேசம் மற்றும் ஹிமாச்சலப்பிரதேசத்தில் கனமழையால் பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன.

இம்மாநிலங்களில் உள்ள உயரதிகாரிகளை, மத்திய உள்துறை அமைச்சகம் தொடர்பு கொண்டு அறிக்கைகளை பெற்று வருகிறது.

பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க மத்திய அரசு தயாராக உள்ளதாகவும் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட அஸ்ஸாம், கேரளா, மிஸோரம், திரிபுரா ஆகிய மாநிலங்களுக்கும் மத்திய குழுவினர் சென்று பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<

தேசிய ஊட்டச்சத்து வாரம் இன்று தொடங்கி, வரும் 7ஆம் தேதிவரை கொண்டாடப்படுகிறது.

மத்திய உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியமும், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமும் இணைந்து, ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் இந்த வாரத்தை கொண்டாட ஏற்பாடு செய்துள்ளன.

மக்களின் உடல்நலனை பாதுகாத்து, அவர்களின் செயல்திறனை மேம்படுத்தவும், பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யவும் ஊட்டச்சத்து வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது.

குழந்தைகள் முதல் முதியோர் வரை பல்வேறு தரப்பினருக்கு ஏற்படும் ஊட்டச்சத்து குறைபாட்டை போக்குவதற்கான வழிமுறைகளை எடுத்துக் கூறுவதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் செய்யப்பட்டுள்ளன.

ஊட்டச்சத்துக் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களை அரசு மற்றும் தன்னார்வ அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன.

இதனையொட்டி, கருத்தரங்குகள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் ஆகியவையும் மேற்கொள்ளப்படுகின்றன.

>>>>><<<<

பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனை விதிக்கும் வகையில் வலுவான சட்டங்களை கொண்டு வர வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

உத்ராகண்ட் மாநிலம், ரிஷிகேஷில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், கொல்கத்தாவில் பயிற்சி பெண் மருத்துவருக்கு நிகழ்ந்த வன்கொடுமைக்கு கடும் கண்டனம் தெரிவிப்பதாக கூறினார்.

இதுபோன்ற குற்றச்செயல்கள் மனித சமுதாயத்திற்கே அவப்பெயரை ஏற்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

முன்னதாக இன்று காலை டேரோடூனில் உள்ள தேசிய ராணுவக் கல்லூரி பயிற்சியாளர்களிடையே பேசிய குடியரசு துணைத்தலைவர், ராணுவப் பள்ளிகளில் பெண்கள் சேர்ந்திருப்பது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

பாலின சமத்துவத்தையும் நீதியையும் நிலைநாட்டும் வகையில் பெண்கள் ராணுவத்தில் சேர்ந்திருப்பது நேர்மறையான நடவடிக்கை என்றும் அவர் கூறினார்.

எந்தவொரு சூழ்நிலையிலும், நாட்டின் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய திரு. தங்கர், ராணுவக் கல்லூரி வீரர்கள் நாட்டிற்காக கடமையாற்றுவதில் பெருமை கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் கல்லூரி வளாகத்தில் மரக்கன்று ஒன்றையும் அவர் நட்டு வைத்தார்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தில் ராணுவப் பயிற்சிக் கல்லூரி மாணவ, மாணவியர் பங்கேற்க வேண்டும் என்றும் குடியரசுத் துணைத்தலைவர் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<

பிரபல நாதஸ்வர இசைக்கலைஞர் சேஷம்பட்டி திரு. **T**. சிவலிங்கத்திற்கு மகாராஷ்ட்டிர ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் 'சங்கீத கலா விபூஷன்' வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்கி கௌரவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற நாதஸ்வர திருவிழாவில் இந்த விருதை அவர் வழங்கினார்.

>>>>><<<<

அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்ஸின் **Albino Oliwati** இணை இன்று ஸ்பெயினின் **Marsel –** அர்ஜென்டினாவின் **Horacio** இணையை எதிர்கொள்கிறது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா – ஆஸ்திரேலியாவின் மேத்யூ எப்டன் இணை, அர்ஜென்டினா இணையை எதிர்கொள்கிறது.

>>>>><<<<

பாரிஸ் பாராலிம்பிக் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் நித்யா ஸ்ரீ மற்றும் மனிஷா ராமதாஸ் ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் நித்யா ஸ்ரீ, 21-4, 21-7 என்ற செட்கணக்கில் போலந்தின் **Oliwia-**வை வென்றார்.

மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் மனிஷா ராமதாஸ், 21-13, 21-16 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Mamiko Toyoda-**வை வென்றார்.

**>>>>>END<<<<**